ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 10.2 – கெடுமிடர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமானுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10.2 – கெடுமிடர்

‡ கெடும் இடராய எல்லாம் ⋆
கேசவா என்ன ⋆
நாளும் கொடு வினை செய்யும் ⋆
கூற்றின் தமர்களும் குறுககில்லார் ⋆
விடம் உடை அரவில் பள்ளி ⋆
விரும்பினான் சுரும்பலற்றும் ⋆
தடம் உடை வயல் ⋆
அனந்தபுர நகர் புகுதும் இன்றே ॥ **10.2.1** ॥

இன்று போய்ப் புகுதிர் ஆகில் ⋆
எழுமையும் ஏதம் சாரா ⋆
குன்று நேர் மாடம் மாடே ⋆
குருந்து சேர் செருந்தி புன்னை ⋆
மன்றலர் பொழில் ⋆
அனந்தபுர நகர் மாயன் நாமம் ⋆
ஒன்றும் ஓர் ஆயிரமாம் ⋆
உள்ளுவார்க்கும்பர் ஊரே ॥ **10.2.2** ॥

ஊரும் புட்கொடியும் அஃதே ⋆
உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான் ⋆
சேரும் தண் அனந்தபுரம் ⋆
சிக்கெனப் புகுதிர் ஆகில் ⋆
தீரும் நோய் வினைகள் எல்லாம் ⋆

திண்ணம் நாம் அறியச் சொன்னோம் ⋆
பேரும் ஓர் ஆயிரத்துள் ⋆
ஒன்று நீர் பேசுமினே ॥ **10.2.3** ॥

பேசுமின் கூசம் இன்றிப் ⋆
பெரிய நீர் வேலை சூழ்ந்து ⋆
வாசமே கமழும் சோலை ⋆
வயல் அணி அனந்தபுரம் ⋆
நேசம் செய்துறைகின்றானை ⋆
நெறிமையால் மலர்கள் தூவி ⋆
பூசனை செய்கின்றார்கள் ⋆
புண்ணியம் செய்தவாறே ॥ **10.2.4** ॥

புண்ணியம் செய்து ⋆
நல்ல புனலொடு மலர்கள் தூவி ⋆
எண்ணுமின் எந்தை நாமம் ⋆
இப்பிறப்பறுக்கும் அப்பால் ⋆
திண்ணம் நாம் அறியச் சொன்னோம் ⋆
செறி பொழில் அனந்தபுரத்து ⋆
அண்ணலார் கமல பாதம் ⋆
அணுகுவார் அமரர் ஆவார் ॥ **10.2.5** ॥

அமரர் ஆய்த் திரிகின்றார்கட்கு ⋆
ஆதி சேர் அனந்தபுரத்து ⋆
அமரர் கோன் அர்ச்சிக்கின்று ⋆
அங்ககப் பணி செய்வர் விண்ணோர் ⋆
நமர்களோ ! சொல்லக் கேண்மின் ⋆
நாமும் போய் நணுக வேண்டும் ⋆

குமரனார் தாதை துன்பம் ⋆
துடைத்த கோவிந்தனாரே ॥ **10.2.6** ॥

துடைத்த கோவிந்தனாரே ⋆
உலகுயிர் தேவும் மற்றும் ⋆
படைத்த எம் பரம மூர்த்தி ⋆
பாம்பணைப் பள்ளி கொண்டான் ⋆
மடைத்தலை வாளை பாயும் ⋆
வயல் அணி அனந்தபுரம் ⋆
கடைத்தலை சீய்க்கப் பெற்றால் ⋆
கடு வினை களையலாமே ॥ **10.2.7** ॥

கடு வினை களையல் ஆகும் ⋆
காமனைப் பயந்த காளை ⋆
இடவகை கொண்டதென்பர் ⋆
எழில் அணி அனந்தபுரம் ⋆
படம் உடை அரவில் ⋆
பள்ளி பயின்றவன் பாதம் காண ⋆
நடமினோ நமர்கள் உள்ளீர் ! ⋆
நாம் உமக்கறியச் சொன்னோம் ॥ **10.2.8** ॥

நாம் உமக்கறியச் சொன்ன ⋆
நாள்களும் நணிய ஆன ⋆
சேமம் நன்குடைத்துக் கண்டீர் ⋆
செறி பொழில் அனந்தபுரம் ⋆
தூப நல் விரை மலர்கள் ⋆
துவள் அற ஆய்ந்து கொண்டு ⋆

வாமனன் அடிக்கென்றேத்த ⋆
மாய்ந்தறும் வினைகள் தாமே ॥ **10.2.9** ॥

மாய்ந்தறும் வினைகள் தாமே ⋆
மாதவா என்ன ⋆
நாளும் ஏய்ந்த பொன் மதிள் ⋆
அனந்தபுர நகர் எந்தைக்கென்று ⋆
சாந்தொடு விளக்கம் தூபம் ⋆
தாமரை மலர்கள் நல்ல ⋆
ஆய்ந்து கொண்டேத்த வல்லார் ⋆
அந்தம் இல் புகழினாரே ॥ **10.2.10** ॥

‡ அந்தம் இல் புகழ் ⋆
அனந்தபுர நகர் ஆதி தன்னை ⋆
கொந்தலர் பொழில் ⋆
குருகூர் மாறன் சொல் ஆயிரத்துள் ⋆
ஐந்தினோடைந்தும் வல்லார் ⋆
அணைவர் போய் அமர் உலகில் ⋆
பைந்தொடி மடந்தையர் தம் ⋆
வேய் மரு தோள் இணையே ॥ **10.2.11** ॥

அடிவரவு — கெடும் இன்று ஊரும் பேசுமின் புண்ணியம் அமரராய் துடைத்த கடுவினை நாமுமக்கு மாய்ந்த அந்தமில் வேய்மரு

கெடுமிடர் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்